பெருந்துறை நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர்:திரு.கே.புனிதன்.எம்.ஏ.பி.எட்

ந.க.எண்:462/2024/அ1 **நாள்: 04.11.2025**

பொருள் மனைப் பிரிவு – பெருந்துறை நகராட்சி - ரீ.ச.எண்: 520/2A ல் 0.6085 (3463.00 சதுர மீட்டர்) ஏக்கர் நிலத்திற்கு – குடியிருப்பு மனைப்பிரிவு – அங்கீகாரம் வழங்கி உத்தரவிடுவது – தொடர்பாக,

பார்வை:

1. தங்களது விண்ணப்பம் நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட நாள்: 27.08.2024.
2. தானப் பத்திரம் எண்: 3949/2024, நாள்: 27.06.2024 மற்றும் ஆவண எண். 4876/2024, நாள் 14.08.2024.
3. துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஈரோடு அவர்களின் செயல்முறைகள் எண்.NEUL95G3/2024/TCP, நாள்: 17.08.2024
4. இந்நகரமன்ற தீர்மான எண்: 79, நாள்: 31.10.2025
5. நகராட்சி பொறியாளர் அவர்களின் குறிப்பு, நாள்: 03.11.2025
6. செலுத்துச்சீட்டு எண்: 1467/2025, நாள்: 03.11.2025.

உத்திரவு :

பார்வை 1-ல் காணும் 27.08.2024-ம் நாளிட்ட தங்களது (திரு.பி.ஜீவானந்தம், சென்னிமலை ரோடு, சரஸ்வதி நகர், பெருந்துறை) விண்ணப்பத்தில், நகராட்சிக்குட்பட்ட நகரளவு எண்: 520/2A-ல் 0.6085 (3463.00 சதுர மீட்டர்) ஏக்கர் பரப்பளவில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுகளாக பிரிப்பது தொடர்பாக, நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

பார்வை 2-ல் காணும் தானப்பத்திரத்தின்படி, தங்களது இடத்தில் வரும் சாலைகள் மற்றும் பொது உபயோக இடங்கள் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளன.

பார்வை 3-ல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் உத்தரவில், நிபந்தனைகளின்படி மனுதாரர் இடத்தின் மனைப்பிரிவு வரைபடத்திற்கு எண்.235/2024, நாள்.17.08.2024-ல் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 4ல் காணும் இந்நகரமன்ற தீர்மானத்தின்படி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும் பார்வை 5-ல் காணும் நகராட்சி பொறியாளர் அவர்களின் குறிப்பில் உரிய அபிவிருத்தி பணிகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 6-ல் இவ்வலுவலக செலுத்துச்சீட்டின்படி, மனைப்பிரிவு அங்கீகரத்திற்குரிய கட்டணங்கள் செலுத்தி அதன் ரசீதுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பார்வை 3-ல் காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு, 1920 திருத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 176(3)-ன்படி, குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இதன் மூலம் அங்கீகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

மேலும், மனைப்பிரிவிலுள்ள அனைத்து மனையிடங்களுக்கும் காலியிடவரி விதிப்பு செய்து அதன் விவரங்களை சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபட நகல் மற்றும் நிபந்தனைகள் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

ஆணையாளர்

பெருந்துறை நகராட்சி

இணைப்பு:

மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள்.

பெறுநர் :

திரு.பி..ஜீவானந்தம்,

க.எண்.109, ஜீவபவனம்,

சென்னிமலை ரோடு,

சரஸ்வதி நகர்,

பெருந்துறை,

ஈரோடு – 638052.

நகல்:

1. நகராட்சி பொறியாளர் (வரைபடம் மற்றும் தானசாசன நகல்) மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலையினை சொத்துப் பதிவேடு மற்றும் சாலைகள் பராமரிப்பு பதிவேடு ஆகியவற்றில் பதிவு செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது.
2. நகராட்சி வருவாய் உதவியாளர் வரைபட நகலுடன் மனைகளுக்கு காலியிட வரி விதிப்பு செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது.
3. நகரமைப்பு ஆய்வாளர் வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனை புகைப்பட பிரதி.
4. நகரசார் ஆய்வாளர் நகரளவை வரைபடத்தில் தானசாசனத்தின் மூலம் பெறப்பட்ட சாலை மற்றும் பொது உபயோக இடத்தினை நகராட்சி ஆணையாளர் பெயரில் மாற்றம் செய்ய பணிக்கப்படுகிறார்.
5. காசாளர் அசல் தானப்பத்திரத்தினை கையொப்பம் பெற்று கருவூலக பெட்டகத்தில் பாதுகாப்பாக வைக்க பணிக்கப்படுகிறார்.
6. மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் தகவலுக்காக அனுப்பப்படுகிறது.